# சான்றாளரின் சாட்சிய வாக்குமூலம்
# (DEPOSITION OF WITNESS)

மேற்கோள்:– 1. குற்றவியல் நடைமுறை விதிகளின் 42–ஆம் விதி, 53–ஆம் நீதிமன்ற படிவம்
(Rule 42 and Judicial from No. 53 of Criminal Rules of Practice)
2. குற்றவியல் நடைமுறை தொகுப்பு சட்டத்தின் XXIII–ஆம் அத்தியாயம்
(Chapter XXIII Code of Criminal Procedure)

## மூன்றாம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, சேலம்

(IN THE COURT
OF THE III–ADDITIONAL DISTRICT SESSIONS JUDGE, SALEM).

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | :– | S.C.No.302/2015 |
| வாக்குமூலம் அளிக்கும் சான்றாளரின் வரிசை எண் | :– | அ.சா– 30 (PW– 30) |
| பெயர் | :– | சம்பத் |
| கணவரின்/தகப்பனாரின் பெயர் | :– | |
| ஊர் | :– | |
| வருவாய் வட்டம் | :– | |
| சமூகம் (சாதி) | :– | |
| தொழில் | :– | |
| மதம்/சமயம் | :– | |
| வயது | :– | |

**2025–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 11 ஆம் நாள் 1969–ஆம் ஆண்டில் ஆணையுறுதிச் சட்டத்தின் (நடுவன் சட்டம் 44/1969) வகையங்களுக்கு இணங்க சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படடது.**

சான்றாளரின் கையொப்பம்

01–ஆம், 03–ஆம், 05–ஆம், 06–ஆம் எதிரிகள் தோன்றினார்கள். 04–ஆம் எதிரி தோன்றவில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டது. எதிரிகளின் வழக்குரைஞர்கள் தோன்றினார்.

**முதல் விசாரணை:–**

நான் தமிழ்நாடு காவல் துறையில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வசித்துவருகிறேன். நான் கடந்த 02.09.2014 - ஆம் தேதியன்று சேலம், ஆட்டையாம்பட்டி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது அந்த காவல் நிலைய குற்ற எண் 317/2014 வழக்கை புலனாய்விற்காக காவல் உதவி ஆய்வாளர் மணிவண்ணன் என் பார்வைக்கு வைத்தார்.

நான் அன்றே வழக்கை புலனாய்விற்கு எடுத்துக்கொண்டு காலை 10.00 மணிக்கு சம்பவ இடமான அரியானூர் பேக்காடு என் பகுதிக்கு சென்று பழனிசாமி என்பவரின் தென்னந்தோப்பில் சடலம் கிடந்த இடத்திற்கு சென்று சான்றாளர்கள் மாணிக்கவாசகம், கொப்பத்தான் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசரும் மாதிரி வரைபடமும் தயாரித்தேன். மாதிரி வரைபடம் **அ.சா.ஆ–39** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

தொடர்ந்து 10.30 மணிக்கு மேற்சொன்ன அதே சான்றாளர்கள் முன்னிலையில் சம்பவ இடத்திலிருந்து இரத்தம் தோய்ந்த மண் சிறிதளவும் இரத்தம் தோய்யாத மண் சிறிதளவும் மாதிரிக்காக தனிதனியாக எடுத்து மகசரில் கைப்பற்றினேன்.

தொடர்ந்து 10.45 மணிக்கு சம்பவ இடத்திற்கு அருகில் ஒட்டமரகாடு சாலையில் பழனிசாமியின் தென்னந்தோப்பிற்கு அருகில் கிடந்த பதிவு எண் TN.29-AW.5722 கொண்ட பச்சை நிற TVS XL Super என்ற இருச் சக்கர வாகனத்தை அதே சான்றாளர்கள் முன்னிலையில் மகசரில் கைப்பற்றினேன்.

தொடர்ந்து இறந்துபோன விஜயனின் சடலத்தின்மீது பஞ்சாயத்தார்கள் ரத்தினவேல், அசோகன், ரவி, சண்முகம், அருள் ஆகியோர் முன்னிலையிலும் சான்றாளர்கள் கலாவதி, ஜெயலட்சுமி, நடேசன் என்கிற நடராஜன், இந்திரஜித்,

பழனிவேல் ஆகியோர் முன்னிலையிலும் காலை 11.00 மணிமுதல் 13.00 மணிவரை பிரேத விசாரணை மேற்கொண்டு அறிக்கை தயாரித்தேன். பிரேத விசாரணை அறிக்கை **அ.சா.ஆ-40** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

தொடர்ந்து இறப்பிற்கான காரணத்தை அறிவதற்காக விஜயனின் சடலத்தை கூறாய்வு செய்து அறிக்கை பெறுவதற்காக ஒரு வேண்டுகோள் கடிதத்தையும் சடலத்தையும் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் இராசமாணிக்கத்திடம் ஒப்படைத்து சேலம் அரசு மருத்துவமனையில் கொடுக்குமாறு பணித்தேன். அவரும் அவ்வாறே செய்தார்.

தொடர்ந்து சான்றாளர்கள் மாணிக்கவாசகம், கொப்பத்தான், கலாவதி, ஜெயலட்சுமி, நடேசன் என்கிற நடராஜன், இந்திரஜித், பழனிவேல், கனகா, செல்வராஜ் ஆகியோரை தனிதனியாக விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன்.

சிறப்பு உதவி ஆய்வாளர் இராசமாணிக்கும் சடலக்கூறாய்வு முடிந்து சடலத்தில் இருந்து கைப்பற்றப்பட்ட கிழிந்த நிலையில் இரத்த கறை படிந்த அரைகை சட்டை ஒன்று, இரத்த கறை படிந்த நான்கு முழ வெள்ளை வேட்டி ஒன்று, கிழிந்த நிலையில் இரத்த கறை நீலநிற ஜட்டி ஒன்று ஆகியவற்றை தனி அறிக்கை மூலம் கொடுத்தார். அவற்றை நான் 91-ஆம் படிவத்தில் கைப்பற்றினேன். தனி அறிக்கை **அ.சா.ஆ-41** ஆகவும் 91-ஆம் படிவம் **அ.சா.ஆ-42** ஆகவும் குறியீடு செய்யப்படுகின்றன.

விஜயனின் சடலத்தை சடலக்கூறாய்வு செய்தபோது சேகரிக்கப்பட்ட உடல் உள்ளுறுப்புகளை 03.09.2014-ஆம் தேதியன்று சேலம் வட்டார தடைய அறிவியியல் ஆய்வகத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் இராஜமாணிக்கம் மூலம் ஒப்படைத்தேன்.

எதிரிகளை தேடிவந்த நிலையில் 11.11.2014-ஆம் தேதியன்று 01-ஆம் எதிரி சுந்தரமூர்த்தி நாமக்கல் மாவட்டம் பரமத்தி ஊரில் உள்ள நீதித்துறை குற்றவியல் நடுவர் மற்றும் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் சரணடைந்தார் என்று தகவல் கிடைத்தது. அன்றே 02-ஆம் எதிரி கிருபாகரன் சேலம் மாவட்டம் ஓமலூர் நீதித்துறை குற்றவியல் நடுவர் மற்றும் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் சரணடைந்தார் என்று தகவல் கிடைத்தது. 15.11.2014-ஆம் தேதியன்று காலை 11.00 மணிக்கு வீரபாண்டி கிராம நிருவாக அலுவலர் செல்வம் கிராம உதவியாளர் கொப்பத்தான் ஆகிய இருவரும் எதிரி அருண் என்கிற அருண்குமார் என்பவரை ஆட்டையாம்பட்டி காவல் நிலையத்திற்கு கொண்டு வந்து ஒப்படைத்தனர். அன்று காலை 09.00 மணிக்கு கிராம நிருவாக அலுவலர் அவருடை அலுவலகத்தில் இருந்தபோது அருண்குமார் அங்கு சென்று வழக்கு சம்பவத்தை ஒப்புக்கொண்டு வாக்குமூலம் கொடுத்ததாக சொன்னார். அவர் பதிவு செய்த வாக்குமூலத்தையும் எதிரி அருண்குமாரையும் தனி அறிக்கையுடன் ஒப்படைத்தார்.

நான் எதிரி அருண்குமாரை அன்று 11.30 மணிக்கு காரணம் கூறி கைது செய்தேன். எதிரி அருண்குமார் தன்னிச்சையாக ஒப்புதலுரை அளிக்க முன்வந்தார். அவர் சொன்ன ஒப்புதலுரையை சான்றாளர்கள் கண்ணன், ராஜு ஆகியோர் முன்னிலையில் பகல் 12.00 மணிக்கு பதிவுசெய்ய தொடங்கினேன். **விஜயனை கொலைசெய்ய 02-ஆம் எதிரி கிருபாகரன் கொடுத்த 3,000/- உரூபாய் பணத்தை அருண்குமார் வாடகைக்கு குடியிருந்த வீட்டின் உரிமையாளர் இரகுமான் என்பவரிடம் கொடுத்திருப்பதாக சொன்னார்.** ஒப்புதலுரையில் உள்ள இந்த பகுதி **அ.சா.ஆ-43** ஆக எதிரி தரப்பு ஆட்சேபணைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது. அருண்குமார் என்னை அழைத்து சென்று இரகுமானை அடையாளம் காட்டி அவரிடமிருந்து 3,000/- உரூபாயை வாங்கிக் கொடுத்தார். அதை 15.00 மணிக்கு சான்றாளர்கள் கண்ணன்,

ராஜூ ஆகியோர் முன்னிலையில் மகசரில் கைப்பற்றினேன். இரகுமானை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 17.30 மணிக்கு எதிரி அருண்குமாரை கைப்பற்றபட்ட பணத்துடன் காவல் நிலையத்திற்கு கொண்டுவந்து அவரை உரிய சோதனைக்குபின் நீதிமன்ற காவலில் வைக்க நடவடிக்கை எடுத்தேன். பணத்தை உரிய படிவத்தில் அதிகார வரம்புள்ள நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பினேன். தொடர்ந்து சான்றாளர்கள் செல்வம், கொப்பத்தான், கண்ணன், ராஜூ ஆகியோரை தனிதனியாக விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன்.

அருண்குமார் சொன்ன ஒப்புதலுரையின் அடிப்படையில் 16.11.2014-ஆம் தேதியன்று சான்றாளர்கள் சந்திரமூர்த்தி, பெரியசாமி, மாதவி, செல்வராணி, பழனிவேல், காவேரி, பிரகாஷ், கந்தசாமி, மகாதேவன், பழனிவேல் ஆகியோரை காவல் நிலையத்திற்கு வரவழைத்து தனிதனியாக விசாரித்து வாக்குமூலங்கள் பதிவுசெய்தேன். ஏற்கனவே விசாரித்த சான்றாளர்கள் செல்வராஜ், கனகா, கலாவதி, ஜெயலட்சுமி, நடேசன் என்கிற நடராஜன், இந்தரஜித் ஆகியோரை விசாரித்து மறுவாக்குமூலம் பதிவுசெய்தேன். 18.11.2014-ஆம் தேதியன்று விஜயனின் சடலத்தில் இருந்து எடுக்கப்பட்ட இரத்த மாதிரியை சேலம் வட்டார தடைய அறிவியியல் ஆய்வகத்தில் இராசய பரிசோதனைக்காக கொடுத்து ஒப்புகை பெற்றேன். சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்ட தடையங்களை உரிய படிவம் மூலம் அதிகாரவரம்புள்ள நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன்.

24.11.2014- ஆம் தேதியன்று ஏற்கனவே நீதிமன்றத்தில் சரணடைந்த 02-ஆம் எதிரி கிருபாகரனை நீதிமன்ற ஆணை பெற்று காவல் துறை காவல் வைப்பில் எடுத்து காவல் நிலையத்திற்கு கொண்டு சென்று மறுநாள் விசாரித்தேன். அவர் தன்னிச்சையாக ஒப்புதலுரை சொல்ல முன்வந்தார். ஆட்டையாம்பட்டி கிராம நிருவாக அலுவலர் கண்ணன், உதவியாளர் ராஜூ ஆகியோர் முன்னிலையில் கிருபாகரன் கொடுத்த ஒப்புதலுரையை பகல் 11.00 மணிக்கு

பதிவுசெய்தேன். **என்னை கூட்டிச் சென்றால் விஜயனை கொலை செய்த இடத்தையும் கொலை செய்ய பயன்படுத்திய கத்தி, கொலைசெய்ய பயன் படுத்திய இருசக்கர வாகனம் ( PY-01 Z 7877 என்ற unicon வாகனம்), கொலை செய்தற்காக நான் சுந்தரமூர்த்தியிடம் பெற்ற பணத்தில் வாங்கிய வாகனம் (TN 54J 8555 Honda Activa) நான் கொலை செய்யும் போது போட்டிருந்த உடைகள் ஆகியவைகளை வைத்திருக்கும் இடம் ஆகியவற்றை அடையாளம் காட்டி எடுத்து கொடுப்பதாக சொன்னார்.** இந்த பகுதி **அ.சா.ஆ-43** ஆக எதிர் தரப்பு ஆட்சேபணைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது.

26.11.2014-ஆம் தேதியன்று காலை 11.30 மணிக்கு சேலம் கிச்சிபாளையம் முகமது ஹஜி என்பவரது யூனஸ் Auto Works என்ற கடையில் இருந்து PY-01 Z 7877 **என்ற** unicon வாகனத்தை எடுத்துக் கொடுத்தார். அதை சான்றாளர்கள் சேகர், பழனிமுத்து ஆகியோர் முன்னிலையில் மகசரில் கைப்பற்றினேன். 12.30 மணிக்கு அதே இடத்தில் அதே சான்றாளர்கள் முன்னிலையில் பதிவு எண் TN 54J 8555 கொண்ட பழுப்பு நிற Honda Activa இருச்சக்கர வாகனத்தை மகசரில் கைப்பற்றினேன். 13.30 மணிக்கு சேலம் கிச்சிபாளையத்தில் உள்ள எதிரி கிருபாகரன் வீட்டில் Slab மீது இருந்து எடுத்துக்கொடுத்த சிவப்பு, வெள்ளை, கருப்பு நிறத்தில் கட்டம் போட்ட முழுக்கை சட்டை ஒன்று, கருநீல நிற Jeans pant ஒன்று ஆகியவற்றை மேற்சொன்ன அதே சான்றாளர்கள் முன்னிலையில் மகசரில் கைப்பற்றினேன். சான்றாளர்கள் பழனிமுத்து, சேகர், முகமது ஹஜீ ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன்.

27.11.2014-ஆம் தேதியன்று 02-ஆம் எதிரி கிருபாகரனை மீண்டும் நீதிமன்ற காவலில் ஒப்படைத்தேன். அவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட சொத்துக்களை உரிய படிவத்தில் நீதிமன்றத்திற்கு அனுப்பினேன்.

ஏற்கனவே நீதிமன்றத்தில் சரணடைந்த 01-ஆம் எதிரி சுந்தரமூர்த்தியை நீதிமன்றத்தின் ஆணை பெற்று 27.11.2014-ஆம் தேதியன்று காவல் துறை காவல் வைப்பில் பெற்று காவல் நிலையத்திற்கு கொண்டுவந்தேன். மறுநாள் அவரை விசாரித்தேன். அவர் தன்னிச்சையாக ஒப்புதலுரை சொல்ல முன்வந்தார். அந்த ஒப்புதலுரையை சான்றாளர்கள் கண்ணன், ராஜூ ஆகியோர் முன்னிலையில் காலை 06.00 மணிமுதல் பதிவுசெய்தேன். **நான் கொலை செய்ய பயன்படுத்திய கத்தியை மறைத்து வைத்துள்ள இடத்தையும், விஜயனை நான் கொலை செய்தபோது போட்டிருந்து சர்ட்டையும், கொலை சம்பவத்தின் போது நான் பயன்படுத்திய என்னுடைய TVS XL Super Heavy Duty TN 30 AR 7725 என்ற பச்சைநிற வண்டியை அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்கிறேன். மேலும் கொலை சம்பவத்திற்கு முன்பும், சம்பவத்திற்கு பின்பும் கொலை செய்ய வந்தவர்களுடன் பேசிய சாம்சங் செல்போன், MTS ஆகிய இரு செல்போன்களை எடுத்து ஆஜர் செய்கிறேன். இதில் சாம்சங் செல்போனில் போட்டிருந்த இரண்டு சிம்களையும் எடுத்து உடைத்துவிட்டேன். MTS செல்போனில் பயன்படுத்திய ஒரு சிம் மட்டும் அப்படியே உள்ளது** என்று சொன்னபகுதி எதிரிகள் தரப்பு ஆட்பேணைக்கு உட்பட்டு **அ.சா.ஆ–44** குறியீடு செய்யப்படுகிறது.

28.11.2014- ஆம் தேதியன்று காலை 10.00 மணிக்கு அரியானூர் பேக்காட்டு வளவில் 01-ஆம் எதிரி சுந்தரமூர்த்தியின் வீட்டிற்கு கிழக்கு புறத்தில் கூரை இரவானத்திலிருந்து எடுத்துக்கொடுத்த இரத்த கறை படிந்த கத்தி ஒன்று, முன்புறம் இரத்த கறை படிந்த N nice Palampatti என்ற Tailor Mark கொண்ட சட்டை ஆகியவற்றை எடுத்துக்கொடுத்தார். அவற்றை சான்றாளர்கள் கண்ணன், செல்வம் ஆகியோர் முன்னிலையில் மகசரில் கைப்பற்றினேன். 11.30 மணிக்கு அதே வீட்டின் கிழக்கு புறத்தில் இருந்த கொட்டகையில் இருந்து பதிவு எண் TN 30 AR 7725 கொண்ட TVS Super XL Heavy Duty என்ற பச்சை நிற இருச்சக்கர

வாகனத்தை எடுத்துக் கொடுத்தார். அதை மேற்சொன்ன அதே சான்றாளர்கள் முன்னிலையில் மகசரில் கைப்பற்றினேன். 14.00 மணிக்கு 01-ஆம் எதிரி சுந்தரமூரத்தி அவரது வீட்டில் இருந்து கொடுத்த Samsung கருப்பு நிற கைப்பேசி ஒன்று, MTS கருப்பு நிற கைப்பேசி ஒன்று ஆகியவற்றை அதே சான்றாளர்கள் முன்னிலையில் மகசரில் கைப்பற்றினேன். முதல் கைப்பேசியில் Sim இல்லை. இரண்டாம் கைப்பேசியில் Sim இருந்தது.

எதிரியையும் வழக்கு சொத்துக்களையும் காவல் நிலையத்திற்கு கொண்டுவந்தேன். எதிரியை மீண்டும் நீதிமன்ற காவலில் ஒப்படைத்தேன். அவரிடம் கைப்பற்றப்பட்ட சொத்துக்களை உரிய படிவத்தில் நீதிமனத்தில் ஒப்படைத்தேன். சான்றாளர்கள் செல்வம், ராஜூ, கண்ணன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன்.

29.11.2014- ஆம் தேதியன்று 06-ஆம் எதிரி ஆனந்தனை தேடிவந்த நிலையில் எனக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில் சேலம் சங்கீத் திரையரங்கத்திற்கு அருகில் இருந்த ஆனந்தனை தகவலாளி அடையாளம் காட்ட காலை 08.00 மணிக்கு காரணம் கூறி கைதுசெய்தேன். ஆனந்தனை நான் விசாரித்தேன். அவர் தன்னிச்சையாக ஒப்புதலுரை அளிக்க முன்வந்தார். அவர் தன்னிச்சையாக சொன்ன ஒப்புதலுரையை சான்றாளரகள் சேகர், ரவி ஆகியோர் முன்னிலையில் காலை 09.00 மணிக்கு பதிவுசெய்தேன். **என்னை கூட்டிப்போனால் நான் மேலே சொன்ன 05 நபர்களுடன் சேர்ந்து விஜயனை கொலை செய்த இடத்தினை அடையாளம் காட்டுகிறேன். நான் விஜயனை கொலை செய்த சமயம் போட்டிருக்கும் காக்கி கலர் பேண்ட், சர்ட், இவைகளை எங்க வீட்டில் வைத்திருப்பதையும், நான் பயன்படுத்திய என் செல்போனையும் எடுத்து ஆஜர் செய்தேன். நான் விஜயனை கொலை செய்ததற்கு வாங்கிய பணத்தில் நான் வாங்கிய கடனுக்கு திருப்பி கொடுத்தவர்களான மேலே சொன்ன குமாரையும், செந்தில் நாதனையும்**

**அடையாளம் காட்டி அவர்களிடம் இருந்து நான் கொடுத்த பணத்தை பெற்று தருகிறேன்** என்று உள்ள பகுதி எதிரி தரப்பு ஆட்சேபணைக்கு உட்பட்டு **அ.சா.ஆ-45** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

29.11.2014- ஆம் தேதியன்று பகல் 12.00 மணிக்கு எதிரி ஆனந்தன் சேலம் குகைப்பகுதியில் இருந்த அவரது வீட்டில் இருந்து கருப்பு நிற Samsung கருப்பு நிற கைப்பேசி ஒன்று, Best Slm 6 என்ற Tailor Mark உள்ள காக்கி நிற அரை கை சட்டை ஒன்று ஆகியவற்றை சான்றாளர்கள் சேகர், ரவி ஆகியோர் முன்னிலையில் மகசரில் கைப்பற்றினேன். 14.00 மணிக்கு அதே சான்றாளர்கள் முன்னிலையில் சேலம் குகை புலிக்குத்தி தெருவில் உள்ள குமார் என்பவரை அடையாளம் காட்டி அவரிடம் கொடுத்த 12,000/- உரூபாயை வாங்கி கொடுத்ததை மகசரில் கைப்பற்றினேன். 16.30 மணிக்கு அதே சான்றாளர்கள் முன்னிலையில் கிச்சிபாளையம் சன்னியாசிகுண்டு முதன்மை சாலையில் Best Medicals உரிமையாளர் செந்தில்நாதன் என்பவரிமிருந்து 10,000/-உரூபாயை வாங்கி கொடுத்தார். அதை மேற்சொன்ன அதே சான்றாளர்கள் முன்னிலையில் மகசரில் கைப்பற்றினேன். எதிரி ஆனந்தனை கைப்பற்றப்பட்ட சொத்துக்களுடன் காவல் நிலையத்திற்கு கொண்டுவந்து உரிய சோதனைக்குபின் எதிரியை நீதிமன்ற காவலில் வைக்க நடவடிக்கை எடுத்தேன். வழக்கு சொத்துக்களை உரிய படிவத்தில் உரிய நீதிமன்றத்திற்கு அனுப்பினேன். சான்றாளர்கள் சேகர், ரவி, குமார், செந்தில்நாதன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவுசெய்தேன்.

18.11.2014- ஆம் தேதியன்று 03-ஆம் எதிரி மேகநாதன் சங்ககிரி நீதித்துறை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திலும் 04- ஆம் எதிரி சந்தோஷ்குமார் ஓமலூர் மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் சரணடைந்தனர். 01.12.2014- ஆம் தேதியன்று நீதிமன்றத்தின் ஆணை பெற்று அவர்கள் இருவரையும் காவல் துறை காவல் வைப்பில் எடுத்தேன்.

02.12.2014- ஆம் தேதியன்று 03- ஆம் எதிரி மேகநாதனை விசாரித்தேன். அவர் தன்னிச்சையாக ஒப்புதலுரை அளித்தார். அவர் சொன்ன ஒப்புதலுரையை சான்றாளர்கள் கண்ணன், ராஜு ஆகியோர் முன்னிலையில் 11.00 மணிக்கு பதிவுசெய்தேன். **என்னை கூட்டிச்சென்றால் விஜயனை நாங்க கொலைசெய்ய இடத்தை தங்களுக்கு அடையாளம் காட்டி விஜயனை கொலைசெய்ய சுந்தரமூர்த்தி கொடுத்த பணத்தில் கிருபாகரன் எனக்கு வாங்கிக்கொடுத்த சர்ட்டை என் வீட்டிலிருந்து எடுத்து கொடுக்கிறேன்** என்று சொன்ன பகுதி எதிரி தரப்பு ஆட்சேபணைக்கு உட்பட்டு **அ.சா.ஆ-46** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

தொடரந்து எதிரி சந்தோஷ்குமாரை விசாரித்தேன். அவர் தன்னிச்சையாக ஒப்புதலுரை அளித்தார். அவர் சொன்ன ஒப்புதலுரையை சான்றாளர்கள் கண்ணன், ராஜு ஆகியோர் முன்னிலையில் 13.00 மணிக்கு பதிவுசெய்தேன். **என்னை கூட்டிச்சென்றால் விஜயன் கொலைக்கு நான் பயன்படுத்திய என்னுடைய TVS Star City TN** 54 **D** 5902 **என்ற வண்டியை என் வீட்டிலிருந்து எடுத்து கொடுக்கிறேன். மேலும் கொலை செய்ததற்கு சுந்தரமூர்த்தி கொடுத்த பணத்தில் கிருபாகரன் வாங்கிக்கொடுத்த பேண்ட்டை என் வீட்டிலிருந்து எடுத்துக்கொடுக்கிறேன்** என்று சொன்ன பகுதி எதிரி தரப்பு ஆட்சேபணைக்கு உட்பட்டு **அ.சா.ஆ-47** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

தொடர்ந்து 03.12.2024- ஆம் தேதியன்று காலை 09.00 மணிக்கு எதிரி மேகநாதனை சேலம் கிச்சிபாளையம் அறிஞர் அண்ணா தெருவில் உள்ள மேகநாதனின் வீட்டில் இருந்து கருப்பு நிறத்தில் வெள்ளை இளஞ்சிவப்பு நிறம் கோடுபோட்ட சட்டை ஒன்றை எடுத்துக் கொடுத்தார். அதை அதே சான்றாளர்கள் முன்னிலையில் மகசரில் கைப்பற்றினேன். 12.00 மணிக்கு சேலம் பொன்னம்மா பேட்டை புதுத்தெருவில் உள்ள சந்தோஷ்குமாரின் வீட்டிற்கு சந்தோஷ்குமார்

அழைத்து சென்றார். அவர் வீட்டில் இருந்து பதிவு எண் TN 54 D5902 கொண்ட இருச்சக்கர வாகனத்தையும் நீலநிற Jens pant ஒன்று ஆகியவற்றை எடுத்துக் கொடுத்தார் அதை மேற்சொன்ன அதே சான்றாளர்கள் முன்னிலையில் மகசரில் கைப்பற்றினேன். எதிரிகள் இருவரையும் வழக்கு சொத்துக்களுடன் காவல் நிலையத்திற்கு கொண்டுவந்து எதிரிகளை மீண்டும் நீதிமன்ற காவலில் ஒப்படைத்தேன். வழக்கு சொத்துக்களை உரிய படிவத்தில் நீதிமன்றத்திற்கு அனுப்பினேன். சான்றாளர்கள் சேகர், பழனிமுத்து, மேற்சொன்ன இருச்சக்கர வாகனத்தின் உரிமையாளர் பரமசிவம் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன்.

04.12.2014- ஆம் தேதியன்று இந்த வழக்கை இந்திய தண்டனை தொகுப்பு சட்டத்தின் 120(B), 147, 148, 341, 302 ஆகிய பிரிவுகளின்கீழ் தண்டிக்கதக்க குற்றங்களுக்கான வழக்காக மாற்றி அறிக்கை அனுப்பினேன். அந்த அறிக்கை **அ.சா.ஆ-48** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

சான்றாளர் மிகவும் பொறுமையாகவும் பெட்டியில் ஏறியபின் ஆவணங்களை தேடித்தேடி சொல்வதால் நேரமின்மை காரணமாக முதல் விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.